**செய்தி வெளியீடு எண் : 1761** **நாள் : 08.10.2022**

## செய்தி வெளியீடு

### பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்களின் 125–ஆவது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், முன்னாள் முதலமைச்சர் பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்களின் பிறந்த நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி, அன்னாரின் 125–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் 09.10.2022 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்கள் காஞ்சிபுரத்தில் 09.10.1897 அன்று நசரத்பேட்டையில் பிறந்தார். வழக்கறிஞர் பட்டம் பெற்ற இவர். நாட்டுப்பற்று காரணமாக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். காந்திய கொள்கையில் ஈடுபாடு உள்ளவர். இவர் சிறந்த தேசியவாதி. காந்தியடிகள் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1935ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி துணை மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1937ஆம் ஆண்டு அமைந்த இராஜாஜி அமைச்சரவையில் நாடாளுமன்ற செயலராக பொறுப்பு வகித்தார். 1946 முதல் 1962 வரை பல்வேறு துறைகளின் அமைச்சராக பொறுப்புவகித்து திறம்பட செயலாற்றிய இவர், 1963 முதல் 1967 வரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு வகித்தார்.

பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்கள் எளிமையையும் ,காலந்தவறாமையையும், நேர்மையையும் வாழ்க்கை நெறியாக கடைபிடித்தார். 13.02.1987 அன்று மறைந்தார். அன்னாருக்கு பெருமை சேர்க்கும் விதமாக அன்னாரின் நினைவிடம் கிண்டி, காந்தி மண்டபத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 13.03.1998 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சார்பில் பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்களின் 125–ஆவது பிறந்த நாள் விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in